**கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், வேலூர்.**

**முன்னிலை:- வெ.ரவிச்சந்திரன், பி.எஸ்.சி, பி.எல்.,**

**தலைமை ஏற்பு அதிகாரி.**

**2023ம் ஆண்டு ஜுன் மாதம் 9ம் நாள் வெள்ளிக்கிழமை**

**கணக்கீட்டு மனு எண்.49/2021**

**(சி.என்.ஆர்.எண்.TNVL02-000047-202)**

G.சித்ரா, வயது 49,
க/பெ.சங்கர்,
எண்.31, இரண்டாம் தெரு,
பழைய சோமலாபுரம்,
சோமலாபுரம், வழி: ஆம்பூர்-635 802. . . . மனுதாரர்

எதிராக

டி.அப்துல் வாஹித் பிரைவேட் லிமிடெட்,
புட்வேர் டிவிஷன்,
எண்.66/1, எம்.சி.ரோடு,
சின்னகொம்மேஸ்வரம்,
கங்காபுரம் அஞ்சல், வழி: ஆம்பூர்-635 802. . . . எதிர்மனுதாரர்

இம்மனுவானது கடந்த 26.05.2023 அன்று என் முன்னர் இறுதியான விசாரணைக்கு வந்ததில், மனுதாரர் தரப்பில் தொழிற்சங்க செயலாளர் திரு.ஆர்.சுந்தரமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தோன்றா தரப்பினராக ஆக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் என் ஆய்வில் இருந்த இம்மனுவில் இன்று வழங்கும்:-

**உ த் த ர வு**

இம்மனுவானது மனுதாரருக்கு எதிர்மனுதாரர் நிறுவனத்தால் 30.09.2019 தேதிய கடிதம்/உத்தரவு மூலம் சேர வேண்டிய ஆகஸ்டு-2019 சம்பள நிலுவை

தொகை ரூ.10,220/-, 2018-போனஸ் தொகை ரூ.20,921/-, என்கேஷ்மெண்ட் லீவு தொகை ரூ,4,964/-, 2019-போனஸ் தொகை ரூ.18,085/-, என்கேஷ்மெண்ட் லீவு தொகை ரூ.4,296/-, ஆக மொத்தம் ரூ.58,486/- கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>**மனுதாரர் தாக்கல் செய்த மனு உரை சுருக்கம்**</u>:-

மனுதாரர் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் ஸ்கில்டு தொழிலாளியாக 01.07.2009 முதல் 30.09.2019 வரை பணியாற்றியுள்ளதாகவும், பின்னர் 30.09.2019ல் பணிநீக்கம் செய்யப்பட்டதாவும், நிர்வாகம் கடிதம்/உத்தரவு மூலம் அனுமதித்த ஆகஸ்டு-2019 சம்பள நிலுவை தொகை ரூ.10,220/-, 2018-போனஸ் தொகை ரூ.20,921/-, என்கேஷ்மெண்ட் லீவு தொகை ரூ,4,964/-, 2019-போனஸ் தொகை ரூ.18,085/-, என்கேஷ்மெண்ட் லீவு தொகை ரூ.4,296/-, ஆக மொத்தம் ரூ.58,486/- கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.த.சா.1 ஆக விசாரிக்கபட்டு அவர் மூலமாக ம.த.சா.ஆ.1 குறியிடப்பட்டுள்ளது.

இந்த மனுவில் தீர்வு காண வேண்டிய சங்கதி யாதெனில், மனுதாரர் கோரியுள்ளவாறு மனுதாரருக்கு சேர வேண்டிய ஆகஸ்டு-2019 சம்பள நிலுவை தொகை ரூ.10,220/-, 2018-போனஸ் தொகை ரூ.20,921/-, என்கேஷ்மெண்ட் லீவு தொகை ரூ,4,964/-, 2019-போனஸ் தொகை ரூ.18,085/-, என்கேஷ்மெண்ட் லீவு தொகை ரூ.4,296/-, ஆக மொத்தம் ரூ.58,486/- வழங்கிட எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டுமா என்பதேயாகும்.

4. <u>**தீர்வு**</u> :-

மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அதன்படி **: –**

இந்த மனுதாரர் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் ஸ்கில்டு தொழிலாளியாக

01.07.2009 முதல் பணியாற்றி பின்னர் 30.09.2019ல் பணி நீக்கம் செய்யப்பட்டதாகவும், எதிர்மனுதாரர் நிறுவனம் மனுதாரர் மற்றும் இதர பணியாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி மனுதாரர் மற்றும் இதர பணியாளர்களிடமிருந்து ராஜினாமா கடிதம் பெற்றுக் கொண்டு அவர்களுக்கு சேர வேண்டிய இறுதி தொகை குறித்து செட்டில் மெண்ட் செய்து அதன்படி 30.09.2019 தேதியில் மனுதாரருக்கு கம்பெனி நிர்வாகம் கொடுக்க வேண்டிய ஆகஸ்டு-2019 சம்பள நிலுவை தொகை ரூ.10,220/-, 2018-போனஸ் தொகை ரூ.20,921/-, என்கேஷ்மெண்ட் லீவு தொகை ரூ,4,964/-, 2019-போனஸ் தொகை ரூ.18,085/-, என்கேஷ்மெண்ட் லீவு தொகை ரூ.4,296/- குறித்து தெளிவாக குறிப்பிட்டு எதிர்மனுதாரர் நிறுவன மேனேஜர் கையெழுத்திட்டு கடிதம் ஒன்றை கொடுத்ததாகவும், அதன்படி மனுதாரருக்கு எதிர்மனுதாரர் கம்பெனி மூலம் சேர வேண்டிய ஆகஸ்டு-2019 சம்பள நிலுவை தொகை ரூ.10,220/-, 2018-போனஸ் தொகை ரூ.20,921/-, என்கேஷ்மெண்ட் லீவு தொகை ரூ,4,964/-, 2019-போனஸ் தொகை ரூ.18,085/-, என்கேஷ்மெண்ட் லீவு தொகை ரூ.4,296/-, ஆக மொத்தம் ரூ.58,486/- வழங்கிட எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு உத்தரவு பிறப்பிக்குமாறு வாதுரைக்கப்பட்டுள்ளது. அதற்கு ஆதரவாக ஆவணம் ம.த.சா.ஆ.1 குறியிடப்பட்டுள்ளது. மனுதாரருக்கு சேர வேண்டிய இறுதி தொகை குறித்து எதிர்மனுதாரர் நிறுவனத்தால் வழங்கப்பட்ட 30.09.2019 தேதியிட்ட கடித நகல் ம.த.சா.ஆ.1 ஆக குறியிடப்பட்டுள்ளது. மனுதாரரது கோரிக்கைக்கு மாறாக எதிர்மனுதாரர் முன்னிலையாகி எதிருரை தாக்கல் செய்யவில்லை. எதிர்மனுதாரர்கள் வழக்கில் முன்னிலையாகி இந்த மனுவை நடத்தாத நிலையில், மனுதாரர் சாட்சியம் மூலமாக எதிர்மனுதாரர் நிறுவனத்திலிருந்து மனுதாரருக்கு சேர வேண்டிய ஆகஸ்டு-2019 சம்பள நிலுவை தொகை ரூ.10,220/-, 2018-போனஸ் தொகை ரூ.20,921/-, என்கேஷ்மெண்ட் லீவு தொகை ரூ,4,964/-, 2019-போனஸ் தொகை ரூ.18,085/-,

என்கேஷ்மெண்ட் லீவு தொகை ரூ.4,296/-, ஆக மொத்தம் ரூ.58,486/- நிலுவையிலுள்ளது என்று நிரூபிக்கப்பட்டுள்ளதாக கருதி மனுதாரர் கோரியுள்ளவாறு பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**இறுதியாக, இந்த மனுவை அனுமதித்து மனுதாரர் கோரியுள்ளவாறு எதிர்மனுதாரர் மனுதாரருக்கு சேர வேண்டிய ஆகஸ்டு-2019 சம்பள நிலுவை தொகை ரூ.10,220/-, 2018-போனஸ் தொகை ரூ.20,921/-, என்கேஷ்மெண்ட் லீவு தொகை ரூ,4,964/-, 2019-போனஸ் தொகை ரூ.18,085/-, என்கேஷ்மெண்ட் லீவு தொகை ரூ.4,296/-, ஆக மொத்தம் ரூ.58,486/-ஐ மூன்று மாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், செலுத்த தவறினால் மேற்படி தொகைக்கு ஆண்டொன்றுக்கு 6 சதவீத வட்டி சேர்த்து செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை பற்றிய உத்தரவு இல்லை.**

இந்த உத்திரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, 2023ம் ஆண்டு ஜுன் மாதம் 9ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

V RAVICHANDRAN Digitally signed by V RAVICHANDRAN

**தலைமை ஏற்பு அதிகாரி,**
**கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம்,**
**வேலூர்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u>:-**

ம.த.சா.1 - திருமதி.G.சித்ரா

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணம்</u>:-**

ம.த.சா.ஆ.1 - 30.09.2019 - எதிர்மனுதாரர் நிர்வாகத்தால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட கடித/உத்தரவு நகல்.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>:-**

- இல்லை -

V RAVICHANDRAN Digitally signed by V RAVICHANDRAN

**தலைமை ஏற்பு அதிகாரி,**
**கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம்,**
**வேலூர்.**